# நாளும் ஓர் திருமுறை

# THIRUMURAI A DAY

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தர் அற்புதம்

## திருஆலவாய் – திருநீற்றுப்பதிகம்




இறைவர் திருப்பெயர் : சொக்கலிங்கப்பெருமான், சோம சுந்தரேஸ்வரர்

இறைவியார் திருப்பெயர் : அங்கயற்கண்ணி, மீனாட்சிதேவி

தல மரம் : கடம்பு

தீர்த்தம் : பொற்றாமரை, வைகை ஆறு, எழுகடல்

வழிபட்டோர் : இந்திரன் முதலானோர்.

தேவாரப் பாடல்கள் : 1. சம்பந்தர் - 1. நீல மாமிடற் (1-94),
2. மந்திரமாவது நீறு (2-66),
3. மானின்நேர்விழி மாதராய் (3-39),
4. காட்டு மாவ துரித்துரி (3-47),
5. செய்ய னேதிரு (3-51),
6. வீடலால வாயிலாய் (3-52),
7. வேத வேள்வியை (3-108),
8. ஆலநீழ லுகந்த (3-115),
9. மங்கையர்க் கரசி (3-120).

நாளும் ஓர் திருமுறை

THIRUMURAI A DAY

2. அப்பர் - 1. வேதியா வேத கீதா (4-62),

2. முளைத்தானை முன்னே (6-19).

## தல வரலாறு

- இந்திரன் விருத்திராசுரனைக் கொன்ற சாபம் தீர்க்க விமானத்தில் எழுந்தருளியது.
- இறைவன், சௌந்திர பாண்டியனாக இருந்து ஆட்சி செய்தது.
- அங்கயற்கண்ணியாம் தடாதகைப் பிராட்டியார் இறைவனை மணம் புரிந்து ஆட்சி செய்த பதி.
- 64 திருவிளையாடல்கள் புரிந்த தலம்.
- இராஜசேகர பாண்டியனுக்கு இறைவன் வெள்ளியம்பலத்தில் கால் மாறி ஆடிய தலம்.
- மாணிக்க வாசகர் இறைவனது பெருமையை அரிமர்த்தன பாண்டியனுக்கு உணர்த்திய தலம்.
- கூன் பாண்டியனின் வெப்பு நோய் ஞானசம்பந்தரால் நீக்கப்பெற்று, நின்றசீர் நெடுமாற நாயனார் ஆகிய தலம்.

## சிறப்புகள்

- ஐந்து சபைகளுள் இது வெள்ளிச் சபை.
- தமிழ் சங்கம் நிறுவி தமிழ் வளர்த்த தலம்.
- சம்பந்தர் அனல், புனல் வாதம் செய்து சைவத்தை நிலைப் பெறச் செய்த இடம்.
- மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் சைவம் வளர்த்த தலம்.
- மூர்த்தி நாயனார் அவதரித்த தலம். சொக்கநாதருக்கு சாற்ற மூர்த்தி நாயனார் சந்தனம் அரைத்தச் சந்தனக்கல் இன்றும் கோயிலில் உள்ளது.

# நாளும் ஓர் திருமுறை

# THIRUMURAI A DAY

பதிக வரலாறு : பண் : காந்தாரம்



மதுரையில், அருகர்கூடி, தம்திருமடத்தில் இட்டதீயை, புகலிவேந்தர், இனி அரசன் எய்தும் வெப்பு அகலற் பொருட்டு, தீண்டி, வெண்ணீறு இடுதற்குரிய பேறு உடையன் ஆதலின், பேரருளினால் `பையவே செல்க` என்று ஏவிய வெப்பு நோய் தென்னனை மேவிற்று. முயன்ற பலராலும் தீர்க்க முடியா திருந்தது . `திருஞானசம்பந்தப் பிள்ளையார் கடைக் கண் ணோக்கம் பெற்றால் பிறவி நோயே ஒழியும் எனின், இந்நோய் ஒழிவதில் ஐயமில்லை` என்று குலச்சிறையார் கூறினார். ஞான சம்பந்தர் என்ற திருப்பெயரைக் கேட்டதே பாண்டியனுக்கு ஓரளவு இன் பம் உண்டாக்கிற்று. அதனால், அழைத்துவர அவன் வேண்டினான் . சென்று வணங்கி வேண்டி அழைத்தனர் அமைச்சர் முதலோர். திருவுளம்பற்றிப் பிள்ளையார் எழுந்தருளி னார் . நோக்கும் புண்ணியனானான் காக்கும் பாண்டியன். அவன் வெப்பு நோயை விலக்கப் பாடியருளியது இத் திருநீற்றுப் பதிகம்.

(thevaaram.org)

**மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.01**

பொழிப்புரை :

சிவந்த பவளம் போன்ற வாயினை உடைய உமைபங்கன் ஆகிய திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானது திருநீறு, மந்திரம் போல நினைப்பவரைக் காப்பது. வானவர் தம் மேனிமேல் பூசிக்கொள்ளப்படுவது. அழகு தருவது. எல்லா நூல்களாலும் புகழப்படுவது. ஆகமங்களில் புகழ்ந்து சொல்லப்படுவது. சிவமயத்தில் நிலைத்துள்ளது.

குறிப்புரை :

திருநீறு மந்திரம் போல நினைத்ததைக் கொடுக்கும். நினைத்தவரைக் காக்கும். வானவர் - சிவலோகத்திலுள்ளவர். சிவமானவர். மேலது - திருமேனியில் பூசப்பட்டது. சுந்தரம் - அழகு; சிவப்பொலிவு. துதிக்கப்படுவது என்பதற்கு இத்திருப்பதிகமே சான்று. தந்திரம் - ஆகமம். சிவாகமத்தில் சிறப்பாகச் சொல்லப்படுவது.



சமயத்திலுள்ளது - சிவசமயத்தில் அழியாத பொருளாவது பதி, பசு, பாசம் என்னும்

முப்பொருள். பாசம் - பசுவின் கண் இருந்து பதியால் நீறாக்கப்பட்ட உண்மையை உணர்த்துவது. உள்ளது - சிவம். `ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின்` - ( திருக்குறள்) திருநீறே சிவம். துவர் - பவளம். பங்கன் - பாகன். திரு ஆலவாயான் - மதுரைத்தலத்தில் திருவாலவாய்க்கோயிலுள் எழுந்தருளியிருப்பவன். திருவாலவாயான் திருநீறு என்பது ஆறன்தொகையாதல் அறிவார்க்குத் திருநீறே சிவகதி தரும் என்னும் உண்மை இனிது புலப்படும். `கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை ... பூசி மகிழ்வாரே யாமாகில் ... சாரும் சிவகதி ...` (திருமந்திரம்)




திருச்சிற்றம்பலம்